# திருக்குறள் காட்டும் ஐம்பூத அறிவியல்

**ம.சேதுமாதவன்**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை-29**

7

**ஆய்வுச்சுருக்கம்**

நீர் நிலம் நெருப்பு காற்று ஆகாயம் போன்ற ஐம்பூதங்களில் கூறப்பட்டுள்ள அறிவியல் சார்ந்த விடயங்களை ஐயன் வள்ளுவன் வழி நின்று விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** நீர், நிலம், நெருப்பு, காற்று , ஆகாயம்

**முன்னுரை**

ஆதித் தமிழில் தோன்றி ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் போன்ற உலக மொழிகள் வரை அனைத்திலும் உலா வரும் தமிழ் இலக்கியம் திருக்குறளாகும். தெய்வப்புலவன் பாடிய அனைத்து திருக்குறள்களுமே பல சிறப்புகளை உடையதாக உள்ளன. அதனால் இந்த நூல் உலகப் பொதுமறை என்றும் போற்றப்பட்டது. பல புலவர்களாலும் சாமானிய மக்களாலும் போற்றப்படும் இந்தத் திருக்குறளில் ஐயன் வள்ளுவன் பல அறிவியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டிச் சென்றிருக்கிறார்.

உலகம் இயங்குவதற்கு ஆன்மீகம் எவ்வளவு முக்கியமோ அதேபோல அறிவியலும் முக்கியமே என்பதற்குத் திருக்குறள்கள் சான்றாக அமைந்துள்ளன. மனித வாழ்விற்கு மிகவும் தேவையானது நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகும். இவற்றின் அறிவியல் கூறுகளைத் திருக்குறள் வழி எடுத்துக்காட்டுவது கட்டுரையின் நோக்கமாகும்.

**நீர் சார்ந்த அறிவியல்**

ஒரு மனிதனுக்கு நீர் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும் அந்த நீரின் முக்கியத்துவத்தை பற்றி வள்ளுவப் பெருமான்

**“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு” (குறள் 20)**

இத்திருக்குறள் மூலம் எடுத்துரைக்கிறார்.

எத்துனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது. அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது. இத்திருக்குறளில் நீர் சார்ந்த அறிவியலை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இவ்வுலகம் நீரின்றி இயங்காது என்பதை வள்ளுவப் பெருமான் எடுத்த கூறுகிறார். ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவையே நீர்தான் சோறு இல்லாமல் ஒரு மனிதன் இருந்து விடலாம் ஆனால் நீர் இல்லாமல் ஒருபோதும் இருக்க முடியாது. அந்த நீரை தருவது மழையே என்பதையும் திருக்குறளில் குறிப்பிட்டார்.

**நிலம் சார்ந்த அறிவியல்**

பூமியைச் சுமக்கும் பெண் தெய்வம் பூமாதேவி ஆவாள். பூமாதேவி நல்லவர்களையும் சுமக்கிறாள்; பிறருக்கு இன்னல் தரும் தீயவர்களையும் சுமக்கிறாள். நல்லவர்களால் எல்லோருக்கும் நன்மை என்பதை இவள் உணர்த்துகிறாள். இவளைப் போலவே வள்ளுவப் பெருமான் கூறுகிறார்.

**“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை” (குறள் 151)**

தன்னையே தோண்டினாலும் தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போலத், தன்னை வார்த்தைகளால் அவமதிப்பவரையும் மதித்துப் பொறுப்பது முதன்மை அறம். இத்திருக்குறளில் எல்லோரையும் தாங்குவது நிலமே என்பதை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.
மேலும்

**“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉம் மழை” (குறள் 12)**

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும். அதனால் நீர் இல்லாமல் விவசாயம் இல்லை விவசாயம் இல்லாமல் மக்களுக்கு உணவில்லை என்ற அறிவியல் கூறினை திருக்குறள் எடுத்துக்காட்டுகிறது.

**காற்று சார்ந்த அறிவியல்**

நம் அனைவருக்கும் மிகவும் தேவையான ஒன்று காற்று. காற்று இல்லாமல், நாமக்கு வாழ்வில்லை. இது பல வாயுக்களின் கலவையாகும். இது பூமியின் மேற்பரப்பை உள்ளடக்கிய ஒரு தடிமனான போர்வை ஆகும். வளிமண்டலம் முழு பூகோளத்தையும் உள்ளடக்கிய ஒரு உறை போல் காற்று செயல்படுகிறது இவ்வாறு காற்று மனிதனுக்கும் பிறவற்றுக்கும் அதிக பயன் தருகிறது. இந்தப் பயன்தரும் காற்றை பற்றி வள்ளுவன்

**“அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**

**மல்லன்மா ஞாலங் கரி” (குறள் 245)**

என்ற திருக்குறளின் மூலம் காற்றைப் பற்றி பேசுகிறார். இத்திருக்குறளுக்கு சிவயோகி சிவக்குமார் அவர்கள்துன்பம் அருளை வேண்டி வாழ்பவருக்கு இல்லை இதற்க்கு காற்று பலத்தை கொடுப்பதே சான்று என்றும், மு.வரதராசன் அவர்கள்

அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று என்றும் விளக்கம் தருகின்றனர் .

**நெருப்பு சார்ந்த அறிவியல்**

பஞ்சபூதங்களில் ஒன்று நெருப்பு. சுடர்வீசும் இந்த நெருப்பு, இலக்கிய உலகில் நிரந்தரமாய்ச் சுடர் வீசிக் கொண்டிருக்கும் வள்ளுவரையும் கவர்ந்திருக்கிறது. தாம் எழுதிய திருக்குறளில் பற்பல குறட்பாக்களில் நெருப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பல இடங்களில் தீ என்ற

சொல்லைப் பயன்படுத்துகிறார். இதில் பல அறிவியல் சிந்தனைகள் பரவலாக்கப்பட்டுள்ளன.

**"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு" ( குறள் 129)**

தீயினாலே சுடப்பட்ட புண் உள்ளே ஆறிவிடும்; ஆனால், நாவினால் சுட்ட வடுவானது உள்ளத்தில் ஒரு போதும் மறையவே மறையாது என்று புலியூர்க் கேசிகன் கூறுகிறார். இயந்திர மயமான இந்த உலகில் மனிதன் பல்வேறு வேலைகளைச் செய்து வருகிறான் அவர் வேலை செய்யும் பொழுதோ இல்ல பிற சூழ்நிலைகளையோ ஒருவருக்குத் தீக்காயம் ஏற்பட்டால் அது எளிதில் ஆறிவிடும் என்பதை ஐயன் வள்ளுவன் திருக்குறளில் எடுத்துக்காட்டுகிறார்.

**ஆகாயம் சார்ந்த அறிவியல்**

ஆகாயத்தின் சிறப்பை ஐயன் வள்ளுவன் வான் சிறப்பு என்ற அதிகாரத்தின் மூலம் எடுத்துரைக்கிறார்.

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று" (குறள் 11)**

மழை பெய்வதனாலேதான் உலக உயிர்கள் வாழ்கின்றன; ஆதலால், மழையே உயிர்களுக்கு 'அமிழ்தம்' என்று உணரத்தகும். மழையைப் பற்றி நீர் சார்ந்த அறிவியலிலேயே பார்த்துவிட்டோம். அந்த மழையைத் தருவது ஆகாயமே என்பதை நாம் உணரலாம்.

**முடிவுரை**

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்"( குறள் 271)**

வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும் என்று ஐம்பூதங்களின் சிறப்பை வள்ளுவர் திருக்குறளின் வாயிலாக எடுத்துரைக்கிறார். மேலும் நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகாயம் இந்த ஐம்பூதங்களின் கலவையே இந்த உலகம். இந்த ஐம்பூதங்களே உயிரனங்கள் அனைத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றன. ஐம்பூதங்களின் இயக்கத்தை உணர்த்து இயற்கையோடு இயைந்து வாழ்கின்றபோது இயற்கையை வசப்படுத்த முடியும் என்பதை வள்ளுவன் வாயிலாக நாம் அறியலாம்.

**துணை நூல் பட்டியல்**


- திருக்குறள்
- திருக்குறள் மு வரதராசனார் உரை
- திருக்குறள் பரிமேலழகர் உரை